**நகர் ஊரமைப்பு இயக்குநர்(பொ.) அவர்களின் நடவடிக்கைகள்**
**807. அண்ணாசாலை சென்னை - 600 002.**
முன்னிலை : திரு. அசோக் டோங்ரே, இ.ஆ.ப.,

ந.க.எண் : 6620/10சிபி

நாள் : 23.07.2010

பொருள் : தொகுப்பு வீடுகள் கட்டிடம் -- காஞ்சிபுரம் மாவட்டம் – செங்கல்பட்டு வட்டம் -- நல்லம்பாக்கம் ஊராட்சி/கிராமம், நில அளவை எண்கள் : 205/4(பு),5(பு),8(பு),9(பு),206/1(பு), 210(பு),211/1A,1B,2(பு),3A,3B(பு),4,5A,5C(பு),6(பு),212/1(பு), 2(பு),223/1(பு),2(பு),3(பு),4(பு),224(பு),225/1,2,226/1(பு),2, 227/1,2A,2D,228/1(பு),2(பு),3(பு),229/2A(பு),2B(பு)230/1(பு), 241/2B2(பு),242/1,2(பு)-ல் 48,940.0ச.மீ. பரப்பில் Block 1 முதல் 8 வரையில் 560 குடியிருப்புகள் கொண்ட பலகுடியிருப்பு கட்டிடம் – இசைவு வழங்குதல் குறித்து.

பார்வை : 1) மனுதாரர் M/s. Unitech Limited, கடிதம், நாள் : 02.02.2010.

2) தலைவர், நல்லம்பாக்கம் முதல்நிலை ஊராட்சி மன்ற கடிதம் நாள் : 13.02.2010.

3) நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர்(பொ.), செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் கடிதம் ந.க.எண்.890/10செம4, நாள் : 17.03.2010.

4) அரசாணை எண்.161, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(1)) துறை, நாள் : 09.09.2009.

5) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண் 7486/09பிஏ2, நாள் : 16.04.09.

- - - - -

உத்தரவு :

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், நல்லம்பாக்கம் ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள்:205/4(பு),5(பு),8(பு),9(பு),206/1(பு),210(பு),211/1A,1B,2(பு),3A,3B(பு), 4,5A,5C(பு),6(பு),212/1(பு),2(பு),223/1(பு),2(பு),3(பு),4(பு),224(பு),225/1,2,226/1(பு),2, 227/1,2A,2D,228/1(பு),2(பு),3(பு),229/2A(பு),2B(பு)230/1(பு),241/2B2(பு),242/1,2(பு) -ல் 48,940.0ச.மீ. பரப்பு கொண்ட மனையில் Block 1 முதல் 8 வரையில் தரைத் தளம் + 3 தளங்களில் 560 குடியிருப்புகள் கட்டிடம் கட்ட அனுமதி கோரி பார்வை 3-ல் கட்டிய தங்களது கடிதத்துடன் உத்தேசம் பெறப்பட்டுள்ளது.

உத்தேச கட்டுமானத்திற்குரிய மனையிடத்திற்கு A1 முதல் A44 வரையில் என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

..2.

Scanned by CamScanner

| S. No. | Block Names | Area in Sq.m. G + 3 Floors | No. of Dewellings |
|---|---|---|---|
| 01 | Block – 1 | 8144.988 | 560 குடியிருப்புகள் |
| 02 | Block – 2 | 5425.272 | |
| 03 | Block – 3 | 5425.272 | |
| 04 | Block – 4 | 5428.239 | |
| 05 | Block – 5 | 6784.929 | |
| 06 | Block – 6 | 8144.988 | |
| 07 | Block – 7 | 2712.234 | |
| 08 | Block – 8 | 5425.273 | |
| | Multi Level Car Parking | 2412.86 | Multi Level Car Parking |

மேற்கண்ட உத்தேச பல குடியிருப்பு உபயோக கட்டுமானம் தமிழ்நாடு ஊராட்சி கட்டட விதி-1997 மற்றும் திருத்திய, சிறப்பு கட்டிட வழிகாட்டி நெறிமுறைகள், தொகுப்பு வளர்ச்சி நெறிமுறைகள் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும விதிகள் ஆகியவை அனைத்தும் நிறைவு செய்வதால் கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் / நிபந்தனைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997 பிரிவு 25ன்படி கட்டட அனுமதி வழங்க இசைவு அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை-4ல் கண்ட அரசாணையின்படி உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மற்றும் பார்வை-5ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி நன்னிலை வரியும் பெறப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u> :

1) மனுதாரரிடமிருந்து உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் பெற்றுக் கொண்ட பின்னரே திட்ட அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

2) EIA Clearance சான்று பெற்றுக் கொண்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3) கட்டட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிற்கான அணுகுவழி ஆகியவற்றை தானமாக பத்திரப் பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

4) பொது ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அதற்கான அணுகுவழி ஆகியவற்றை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்பட வேண்டும்.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மைநகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச மனையிடத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு, அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7) உத்தேச இடத்திற்கு வடபுறம் உள்ள OSR-2க்கு அணுகுசாலையாக அமையும் உத்தேச 18மீ. அகல சாலை நிலையில் உள்ள சாலை வரை நீளத்திற்கு உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

Scanned by CamScanner

நிபந்தனைகள் :

01) உத்தேச பல குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்பட வேண்டும்.

02) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

03) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

04) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

05) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் : 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

06) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

07) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

08) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

09) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் ஒவ்வொரு வீட்டையும் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மண்டல துணை இயக்குநர்(பொ.) செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் மேற்கொண்டு உத்திரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு உத்திரவிற்காக மண்டல துணை இயக்குநர்(பொ.) செங்கல்பட்டு மண்டலம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு மண்டல துணை இயக்குநர்(பொ.) செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஒம்.) அசோக்டோங்ரே.
நகர் ஊரமைப்பு இயக்குநர்(பொ.).

**இணைப்பு :**

மூன்று தொகுப்பு வரைபடங்கள் (3 x 14)



Scanned by CamScanner

பெறுநர் :

மண்டல துணை இயக்குநர்(பொ),
செங்கல்பட்டு மண்டலம்.

நகல் :

1) தலைவர்,
நல்லம்பாக்கம் முதல்நிலை ஊராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

2) M/s. Unitech. Ltd.,
Malrojapuram.
Nellikuppam Road,
Nallambakkam,
Chennai – 48.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

எஸ். செல்வி 28/7
கண்காணிப்பாளர்.

28/7/10

கசோ.27/7.

Scanned by CamScanner